## டிசம்பர் – 18 – செவ்வாய்

புனித காசியான்

**அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக! திபா. 72:2**

-----------------------------------------------------------------------

### முதல் வாசகம் : ஏரேமியா 23 : 5 – 8

ஆண்டவர் கூறுவது இதுவே் இதோ நாள்கள் வருகின்றன் அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள "தளிர்" தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையும் நிலைநாட்டுவார். அவர்தம் நாள்களில் யூதா விடுதலை பெறும் இஸ்ரயேல் பாதுகாப்புடன் வாழும். "யாவே சித்கேனு" என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும். ஆதலால் ஆண்டவர் கூறுவது இதோ நாள்கள் வருகின்றன. அப்போது, "எகிப்து நாட்டிலிருந்து இஸ்ரயேல் மக்களை அழைத்து வந்த வாழும் ஆண்டவர்மேல் ஆணை" என்று எவரும் சொல்லார். மாறாக, "இஸ்ரயேல் குடும்ப மரபினர் தங்கள் சொந்த நாட்டில் வாழும்படி, அவர்களை வடக்கு நாட்டிலிருந்தும் அவர்கள் துரத்தியடிக்கப்பட்டிருந்த அனைத்து நாடுகளிலிருந்தும் அழைத்து வந்த வாழும் ஆண்டவர் மேல் ஆணை" என்று கூறுவர்

**பதில்பாடல் :** ஆண்டவருடைய காலத்தில் நீதி தழைத்தோங்கும்

### நற்செய்தி : மத்தேயு 1 : 18 - 25

இயேசு கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப் பட்டிருந்தது. அவர்கள் கூடிவாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரியவந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒருமகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம்மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். "இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள். யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியா தம்மகனைப் பெற்றெடுக்கும்வரை யோசேப்பு அவரோடு உறவு கொள்ளவில்லை. யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார்.

**தியானம்:** ஆண்டவருடைய காலம் என்பது இங்கு எதைக்குறிக்கின்றது? இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மக்கள் எப்போதும் இந்த மண்ணக வாழ்வை தங்காலிகமாகவே பார்த்தார்கள். அரசர்கள் மக்களை ஆளுவதையும் அப்படியே பார்த்தார்கள் அவர்களைப் பொறுத்த மட்டில் கடவுள் வருவார் என்கின்ற நம்பிக்கையோடு வாழ்ந்து வந்தார்கள். அந்த நம்பிக்கை தான் மெசியா வருவார் என்கின்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்தது. அதற்காகவே அவர்கள் தங்கள் வாழ்வை தயாரித்துக் கொண்டிருந்தார்கள். இந்த பிண்ணனியில் ஒரு சில அநியாயமான செயல்கள் நடைபெற்றாலும் அவர்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. கண்டிப்பாக கடவுள் வந்து இந்த உலகில் நடக்கின்ற அநியாயங்களை அகற்றி நீதியை தழைத்தோங்க செய்வார் என்று உறுதியாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையின் வெளிப்பாடுதான் இந்த திருப்பாடல் ஆண்டவரின் அரசு நிச்சயமாக இந்த உலகத்தில் மலரும். அந்த அரசு மலர்கின்ற போது அந்த அரசு ஏழை எளியவர்களுக்கான அரசாக மலரும். மக்கள் விரும்புகின்ற அரசாக இருக்கும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கின்றவர்களுக்கும் அது நீதியை வழங்குகின்ற அரசாக இருக்கும். இறைவனின் இறையரசு இந்த மண்ணில் மலர நாம் இறைவனின் கருவிகளாக மாற வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கும் விழுமியங்களை நம் வாழ்வாக்க வேண்டும் ஆமென்.